**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் – திசம்பர் 2018**

**A011 காப்பிய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மறைந்து போன தமிழ்க் காப்பியங்கள் மூன்றினை எழுதுக.
2. கண்ணகிக்குக் கோயில் கட்டிய மன்னன் யார்?
3. மணிமேகலை பெயர்க்காரணம் கூறுக.
4. நரிவிருத்தம் பாடியவர் யார்?
5. தெரியாத சொல்லும் பொருளும் வந்த அகலக்கவி எது?
6. சிறுத்தொண்டரின் சிறப்பு யாது?
7. இந்திரன் நகருக்கும் மேலான நகரம் எது?
8. ஸ்பென்சரை ஆதரித்தவர் யார்?
9. பாரத வெண்பாவின் ஆசிரியரைக் குறிப்பிடுக.
10. இரட்சணிய யாத்திரிகத்தின் மூல நூல் எது?
11. சீறாப்புராணத்தின் மூன்று காண்டங்களைக் குறிப்பிடுக.
12. முகம்மது இப்ராகீம் பெற்ற பரிசு யாது?
13. வளர்ச்சிக் காப்பியம் என்றால் என்ன?
14. பூங்கொடிக் காப்பியத்தின் ஆசிரியர் யார்?
15. அகலிகையின் வாழ்க்கையைப் பாடுபொருளாகக் கொண்ட காப்பியம் எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. பெருங்காப்பியம், சிறுகாப்பியம் இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
2. சீவகன் மனதில் துறவுச் சிந்தனை எழக் காரணம் என்ன?
3. யசோதர காவியம் உணர்த்தும் தத்துவம் யாது?
4. பெருங்கதையின் தனிச்சிறப்பினை எழுதுக.
5. விவிலியம் கூறும் பத்துக்கட்டளைகள் யாவை?
6. சின்னசீறா உணர்த்தும் நானில மக்கள் குறித்தெழுதுக.
7. பாரத சக்தி மகா காவியத்தின் கருப்பொருளினை குறிப்பிடுக.
8. உரோமின் வரலாற்றுச் சிறப்பினை எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சீவக சிந்தாமணியின் கதைப் போக்கினை எழுதுக.

(அல்லது)

(ஆ) கம்பராமாயணக் காப்பிய வருணனைகளைத் தொகுத்து எழுதுக.

2. (அ) இரட்சணிய யாத்திரிகத்தின் கதைமாந்தர்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) தேம்பாவணி காப்பியத்தினையும் விவிலியத்தையும் ஒப்பிட்டு எழுதுக.

3. (அ) இசுலாமிய இரட்டைக் காப்பியங்கள் குறித்து விரிவாக விளக்குக.

(அல்லது)

(ஆ) பூங்கொடி காப்பியத்தில் இடம் பெற்றுள்ள இசைத் தமிழ் பற்றிய செய்திகளைத் தொகுத்தெழுதுக.

***